
# 22 இலங்கைச் சைவ மரபின் தொன்மையை விபரிக்கும் இதிகாசங்கள்

இலங்கையில் சைவ சமயமானது வரலாற்றுக் காலத்திற்கு முன்பே வேரூன்றி வளர்ச்சி பெற்ற சமயமாகும். இதன் வளர்ச்சி நிலைகளை அறிய இராமாயணம், மகாபாரதம், கந்த புராணம் முதலான இதிகாச புராணங்களும், மகாவம்சம், தீபவம்சம் மற்றும் யாழ்ப்பாண வைபவ மாலை முதலான நூல்களில் காணப்படும் செய்திகளும் இப்புன்பத்துத்தா,மக்கன்சி முதலான தேச சஞ்சாரிகளது குறிப்புகளும் மற்றும் வரலாற்று அறிஞர்களது ஆய்வு முடிவுகளும் தொல்பொருட் சின்னங்களும், சிங்கள மொழியில் அமைந்துள்ள தூது பிரபந்தங்களும் உதவுகின்றன.

வான்மீகி, வசிட்டர், போதயனர் ஆகிய முனிவர்கள் வட மொழியில் இராமனுடைய சரிதையை எழுதியுள்ளனர். தமிழில் கம்ப நாடாழ்வார் கம்பராமாயணத்தை எழுதியுள்ளார். வேதவியாசரால் வடமொழியில் எழுதப்பட்ட மகாபாரதம் தமிழில் வில்லிப்புத்தூர் ஆழ்வாரால் பாடப்பட்டுள்ளது. இத்தகைய இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாச இலக்கியங்கள் இலங்கையில் நிலவிய சைவ சமயத்தின் தொன்மை நிலையை அறிய உதவும் முக்கியமான சான்றாதாரங்களாக அமைகின்றன.

## 1. இராமாயணம்




இராமாயணம் குறிப்பிடும் இலங்கை வேந்தனாகிய இராவணன் சிறந்த சிவ பக்தனாக விளங்கினான். இவன் பதினாறாயிரம் ஆண்டுகள் தவம் செய்து சிவ பெருமானிடத்தில் பல வரங்களைப் பெற்றான். அவனது கையில் விளங்கும் வாளானது அவனது அதீத சிவபக்தியை மெச்சி சிவபெருமானால் வழங்கப்பட்டதாகும்.

இராவணன் சிவபெருமானிடத்தில் கொண்ட பக்தியைப் போன்று தனது தாயாகிய கைகேசியிடத்திலும் மிகுந்த அன்புடையவனாக விளங்கினான். இவனது தாய் சிறந்த சிவபக்தையாக விளங்கினார். இவர் நாள் தோறும் மாவினால் சிவலிங்கங்களை செய்து பூஜிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தாள். இதைக் கண்ட இராவணன் திருக்கைலாயத்தில் இருக்கும் சிவபெருமானிடத்தில் சிவலிங்கங்களைப் பெற்று தனது தாய்வழிபடுவதற்கு உதவி செய்ய எண்ணினான். திருக்கைலாயத்திற்குச் சென்று நீண்ட நாட்களாக தனது கோரிக்கையை சிவபெருமானிடத்தில் முன்வைத்தான். அதற்கு சிவன் செவி

சாய்க்கவில்லை. அவன் கோபத்தினால் கைலாய மலையைப் பெயர்க்க முயன்றான் அப்போது சி வபெருமான் தனது வலது கால் பெருவிரலால் மலையை அமிழ்த்திய போது இராவணன் அதனுள் நசியுண்டான். தான் செய்த தவறுக்கு பதிலாக சிவ பெருமானை மகிழ்விக்க எண்ணினான். தனது பத்து தலைகளில் ஒன்றை ஒடித்து வீணையாக அமைத்தான். சாமகானம் பாடினான்.



சிவபெருமான் இராவணனை விடுவித்து அவனது தாய் வழி படுவதற்காக சி வலிங்கத்தை வணங்கி அருள் செய்தார். இதனை திருஞானசம்பந்தர் ''எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால் ஏத்திட ஆத்தமாம் பேறு கொடுத்தவர்'' என்று திருகோணமலைப் பதிகத்தில் குறிப்பிடுகின்றார். இராவணனது தாய் திருக்கோணேஸ்வரப் பெருமானை அனுதினமும் வழிப்பட்டு வந்தார். ஒரு சமயம் நோய் வாய்ப்பட்டதனால் கோணேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று வழிபட முடியாமல் வருந்தினார். அதனைக் கண்ட இராவணன் தனது தாயின் இருப்பிடத்திற்கு கோணேசரர் ஆலயத்தை கொண்டு செல்லும் முகமாக கோணேச மலையைத் தனது வாளினால் ஓங்கி வெட்டினான். இன்றும் திருக்கோணேஸ்வரத்தில் இராவணன் வெட்டு என்ற வெட்டுண்ட பகுதி காணப்படுகின்றது.




இவ்வாறு இராவணன் கோணேஸ்வரர் ஆலயத்தை பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அவனது தாயார் இறந்த செய்தியை கேள்விப்பட்டு வருந்தினான். தாயின் அந்தியேட்டிக் கிரியைகளை நிறைவு செய்வதற்காக கின்னியாவில் ஏழு வெந்நீர் கிணறுகளை அமைத்தான்.

இராவணன் சிவன் மீது கொண்ட பக்தியைக் கண்டு வியந்த திருஞான சம்பந்தர் தனது திருநீற்றுப்பதிகத்திலே ''**இராவணன் மேலது நீறு**'' என்று குறிப்பிடுவதன் மூலம் அவனது சிவபக்தியின் உன்னத நிலையை அறிந்து கொள்ள முடிகின்றது.



இராமாயணக் குறிப்பின்படி இராவணன் மாத்திரமன்றி அவனது மனைவியாகிய மண்டோதரியும் சிறந்த சிவபக்தையாக விளங்கியதை அறிந்து கொள்ள முடிகின்றது. மண்டோதரியின் தந்தையாகிய **மயன்** என்பவனால் திருக்கேதீஸ்வர ஆலயம் பரிபாலனம் செய்யப்பட்டதாகவும் மண்டோதரி

திருக்கோணேஸ்வரப் பெருமானை அனுதினமும் வழிபட்டதாகவும் அறியமுடிகின்றது. மண்டோதரியின் வேண்டு கோளை ஏற்று சிவபெருமான் சிறு குழந்தையாக அவளது மடியில் தவழ்ந்ததாகவும் அதனை இராவணன் தூக்கி உச்சி மோந்து பெரு மகிழ்வெய்தியதாகவும் **உத்ரகோசமங்கை தலபுராணம்** குறிப்பிடுகின்றது.



இத்தகைய மண்டோதரியின் சிவ பக்தியை அறிந்த மாணிக்க வாசகர் தனது திருவாசகம் குயிற் பத்தில் மேல் வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"ஏர் தரும் ஏழுலகேத்த எவ்வுரு வுந்தன் னுருவாய**
**ஆர்கலி சூழ்தென் னிலங்கை யழகமர் வண்டோ தரிக்கு**
**பேரருள் இன்ப மளித்த பெருந்துறை மேய பிரானை**
**சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்"**

இதேபோன்று மாணிக்க வாசகர் திருவாசகத்தில் மண்டோதரிக்கு சிவன் அருள் பாலித்த தன்மையை பாடியுள்ளார்.

சிறந்த சிவபக்தனாகிய இராவணனை இராமன் அழித்தமையால் இராமனுக்கு பிரம்மஹத்தி தோசம் பீடித்தது. அத்தகைய பிரம்மஹத்தி தோசம் நீங்குவதற்காக இராமன் கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முதலான புராதன சிவாலயங்களை வழிபட்டதாவும் ஈற்றில் முன்னேஸ்வரத்தில் வழிபாடு செய்யும் போது அவனது தோசம் முழுமையாக நீங்கியதாகவும் அப்போது இராமர் முன்னேஸ்வர தலத்தின் மகிமையறிந்து சிவலிங்கத்தினை தாபித்து பூசைகள் செய்து வழிப்பட்டதாவும் அறிய முடிகின்றது.



இராமயணத்தில் குறிப்பிடப்பட்ட சம்பவங்களோடு தொடர்புபடுத்தி இன்றைய இலங்கையில் காணப்படும் பல ஆலயங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. மட்டக்களப்பு மாமாங்க பிள்ளையார் ஆலயம்,யாழ்ப்பாண வில்லூன்றி பிள்ளையார் ஆலயம், மாதகல் திருவடி நிலை, ஹக்கல சீதையம்மன் ஆலயம், றம்பொடை ஆஞ்சனேயர் ஆலயம் என்பன அவையாகும்.

## 2.மகாபாரதம்

மகாபாரதம் இராமாயண இதிகாசத்தைப் போன்று நேரடித் தொடர்பு இல்லாவிட்டாலும் அதில் வரும் ஒரு சில செய்திகள் ஊடாகப் பண்டைய இலங்கையில் விளங்கிய சைவ சமய மரபுகளை அறிய முடிகின்றது. மகாபாரதத்தின் நாயகனாகிய அருச்சுனன் பாசுபத அஸ்திரத்தைப் பெறுவதற்காக பல தீர்த்த யாத்திரைகளை மேற்கொண்டான், என்றும் அவ்வாறு அவன் இலங்கைக்கு வருகை

தந்து பாலாவி தீர்த்தத்தில் நீராடி சிவனை வழிப்பட்டதாகவும், அல்லிராணி எனும் இளவரசியை மணம் முடித்ததாகவும் அறிய முடிகின்றது.

மகாபாரதம் குறிப்பிடும் திரௌபதிக்கு ஆலயம் அமைத்து வழிபடும் மரபு இலங்கையில் வளர்ச்சி பெறலாயிற்று. உடப்பு திரௌபதை அம்மன் ஆலயம், திரௌபதை அம்மாள் ஆலயம் என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

இத்தகைய இதிகாச செய்திகளினுடாக புரதான இலங்கையில் விளங்கிய சைவ நெறியின் சிறப்புக்களை அறியக் கூடியதாகவுள்ளது.

## பயிற்சிகள்

1. புராதன இலங்கையில் நிலவிய சைவத்தின் தொன்மையை அறிய உதவும் சான்றுகள் யாவை?
2. இராவணன் திருக்கைலாய மலையை பெயர்க்க முற்பட்டமை எதற்காக?
3. மண்டோதரியும் அவளது முன்னோர்களும் வழிபட்ட சிவாலயம் யாது?
4. இராவணனை இராமன் கொன்றமையால் இராமனுக்கு பிடித்த தோசம் யாது?
5. அருச்சுணன் எதைப் பெறுவதற்காக தீர்த்த யாத்திரை மேற்கொண்டு இலங்கை வந்தான்.

## செயற்பாடு

★ இதிகாசக்கதைகளோடு தொடர்புடைய இன்றைய ஆலயங்களின் ஆரம்பகால வரலாறுகளைத் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்தவும்.

## பாடச்சுருக்கம்

★ இலங்கை சைவமரபின் தொன்மையை விபரிக்கும் சான்றுகளில் இதிகாசங்களும் முக்கியமான இடத்தினைப் பெற்றுள்ளன.

★ இராவணன் தனது தாய்க்காக திருக்கைலாயத்தையும், கோணமலையையும் பெயர்க்க முற்பட்டான்.

★ மண்டோதரியும் முன்னோர்களும் சிறந்த சிவ பக்தர்களாக விளங்கினர்.

★ இராவணனதும் மண்டோதரியினதும் சிவபக்தியை சமயக் குரவர்கள் போற்றியுள்ளனர்.

★ இன்றைய ஆலயங்கள் சிலவற்றின் வரலாறுகள் இதிகாசக்கதைகளோடு தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன.